# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

எதெல்பெர்காமேரி OSM, ஜெசிந்தா ஆரோக்கிய மேரி OSM,வெர்ஜின் OSM – திருச்சி;அமிர்தராணி OSM, கலிஸ்டா மேரி OSM – திண்டுக்கல்; மேரி செசாரியா SSAM, லூர்து மேரி CIC – சென்னை; செலின்- SJC, சின்னராணி SJC - அணிலாடி; டொனட்டெல்லா அனஸ்தாசியாள் FIHM, அனன்சியா மேரி FIHM, ஜார்லத் புஷ்பா FIHM, பிலோமினாள் FIHM, டொன்போஸ்கோ மேரி FIHM, லூக்காஸ் மேரி FIHM, டோம்னா மேரி FIHM – கும்பகோணம்; லில்லி இஸபெல்லா மேரி OSM – மதுரை; சகாயம் SJC, சிரில் SJC - கடலூர்; செல்வ ராணி OSM; வித்யா மேரி OSM, ரூபெல்லா மேரி OSM – நெல்லை; பிரேமா FSAG; புஷ்பம் FSAG – சிந்தாமணி; மார்சலோஸா மேரி OSM – பழையகாயல்; லோரா மேரி OSM – புன்னைக்காயல்; புஷ்பா மேரி CIC,ஜெய சேகரி OSM – கொடைக்கானல்;, ரூபி மேரி OSM – தோகைமலை. ரோஸ்லின் OSM - மணிகண்டம், செபாஷ்டி -FBS- விழுப்புரம், மோட்ச புஷ்பராணி - நாகை, லாசறரிற்றா மேரி - தூத்துக்குடி
குழந்தை தெரஸ் FASG - சேலம்

**பொதுநிலையினர்**

ரூபியா - மங்கலக்குன்று, பிரான்சிஸ் பேசில், G.S.பாத்திமா, சந்தனம், ஜான் ஜோசப், மேரி மார்கரேட், ஆனி பீட்டர் ராஜ், லீமா தெரஸ், கிளாரா லூர்து மேரி, அனிருத் ஜோஸ்வா, இமாக்குலேட் சோபியா, லூதியா மேரி, ஞான சேகரன்– திருச்சி; இருதய விஜிலா, ஜோஸ்பின் மேரி, வியாகுலம், ராணி - சென்னை; மேரி - இளையரசனேந்தல்; புஷ்பக்கண்ணு, மிக்கேல்சாமி – கோவை; சிப்ரியான் - தெளி; சற்பி - அரியலூர்; ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மரிய பிரகாசம்- தர்மபுரி.

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

அருட்சகோதரி. குழந்தை தெரஸ் FASG - சேலம்
P. வியாகுலம் சென்னை

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.







# அமலம்

## பதிப்பாசிரியர் பக்கம்

**ற.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச**


அமலம் என்ற வார்த்தைக்குப் பல அர்த்தங்கள் இருக்கின்றன. புனிதம், மாசின்மை, தூய்மை மற்றும் கறையில்லாத என்று எத்தனையோ அர்த்தங்கள் இருக்கலாம். அமலத்தை அன்னை மரியாளோடு இணைக்கும்போது அமலம் என்ற வார்த்தை புது அர்த்தத்தைக் கொடுக்கின்றது.

கத்தோலிக்கத் திருஅவையில் அன்னை மரியாளுக்கு நான்கு மரியியல் கோட்பாடுகள் இருக்கின்றன. அதில் ஒரு கோட்பாடுதான் அன்னை மரியாள் அமல உற்பவி. இந்த அமல உற்பவம் என்பதன் அர்த்தம் என்னவென்றால் அன்னை மரியாள் தன் தாயின் வயிற்றில் பிறக்கும்போதே ஜென்மப் பாவமில்லாமல் பிறந்திருக்கின்றாள். இதனைத்தான் 1854 ஆம் ஆண்டு திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் ஒரு மரியியல் கோட்பாடாகப் பிரகடனப்படுத்தினார்.

இந்தக் கோட்பாட்டினை அவ்வளவு எளிதாக திருத்தந்தை பிரகடனப்படுத்தவில்லை. ஏனென்றால் பல சவால்களும் எதிர்ப்புகளும்



## உள்ளே



கதையினில் கலந்த மரியா - 05
தூய கன்னி மரியாவின் அமல உற்பவம் - 06
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 09
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 14
பார்புகழ் பாத்திமா அன்னை வரலாறு - 16
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
மரியின் ஊழியர்சபையின் புனிதம் - 24
மரியா - கடவுளின் கடிதம் - 25
குடும்ப வாழ்வில் மரியா - 28
எம் இதயத்தில் பிறப்பாய் - 30
ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி - 32

திருஅவையில் எழ ஆரம்பித்தது. முக்கியமான பிரச்சனையாகப் பார்க்கப்பட்டது ஜென்மப்பாவமும், மீட்பும்.

படைப்பின் தொடக்கத்திலே ஆதிப் பெற்றோர் ஆதாம் ஏவாள் கீழ்ப்படியாமையால் பாவம் மனித குலத்தில் நுழைந்தது. அதுதான் ஜென்மப்பாவம், மனிதர்களாகப் பிறக்கின்ற அனைவரிலும் இந்த ஜென்மப்பாவம் இருக்கின்றது. இந்த ஜென்மப்பாவத்தில் இருந்து மனித குலத்தை மீட்பதற்குத்தான் இயேசு மனிதராக இந்த உலகில் பிறந்தார்.

இயேசு மனிதராகப் பிறந்த போதும் ஜென்மப்பாவம் அவரைத் தீண்டவில்லை, காரணம் அவர் மனித தலையீடுகளால் பிறக்கவில்லை, தூய ஆவியினால் பிறந்தவர். தமத்திருத்துவத்தின் இரண்டாம் நபர், கடவுளின் ஒரே மகன்.

ஆனால் அன்னை மரியாள் மனிதத் தலையீடுகளால் பிறந்தவள். சாதாரண மனிதப் பெண்மணி. இவர் எப்படி ஜென்மப்பாவமில்லாமல் பிறக்க முடியும். இன்னும் ஒரு விவாதம் திருஅவையில் எழுந்தது. இயேசு மனிதராகப் பிறந்து மனிதக் குலத்தை ஜென்மப்பாவத்தில் இருந்து மீட்டிருக்கின்றார். அப்படியிருக்க அன்னை மரியாள் ஜென்மப்பாவமில்லாமல் பிறந்தவள். ஆதலால், இயேசு அன்னை மரியாளுக்கு மீட்பர் இல்லையா?

இந்த இரண்டு விவாதத்திற்கும் பதில் ஒன்றுதான். கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை, அவர் நினைத்தால் மரியாளை ஜென்மப்பாவமில்லாமல் பிறக்க வைக்க முடியும். ஆண்டவர் இயேசுவை அன்னை மரியாளுக்கு மீட்பராகவும் மாற்ற முடியும். இயேசு என்னும் மீட்பர் எப்போது வேண்டுமென்றாலும் மீட்பைக் கொடுப்பவர். அன்னை மரியாள் தன் தாயான அன்னம்மாள் வயிற்றில் கருவாகி உருவாகும்போதே அவளை ஜென்மப்பாவத்திலிருந்து மீட்டு விட்டார்.

இத்தனை எதிர்ப்புகளையும் கடவுளின் வல்லமையால் வெற்றிகரமாக முறியடித்துதான் திருத்தந்தை அந்த மரியியல் கோட்பாட்டை பிரகடப்படுத்தினார். அன்னை மரியாள் உண்மையாகவே அமல உற்பவி என்பதற்கான ஆதாரங்கள் என்னவென்று பார்த்தால் 1858 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் பெர்னதெத் என்ற சிறுமிக்கு அன்னை மரியாள் 18 முறை காட்சியளித்தார். ஒரு காட்சியில் சிறுமி பெர்னதெத் உங்கள் பெயர் என்ன? என்று கேட்டதற்கு அன்னை மரியாள் '**நானே அமல உற்பவம்**' என்று கூறினார்.

**அமலம் என்ற புனிதம் நம்மிலும் மலரட்டும்**
**அமலம் என்ற தூய்மை நம்மிலும் துளிர்விடட்டும்.**





பார்த்தும் எந்த பலனும் இல்லை. என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர் ஜீவமாதாவைப் பற்றிக் கூறினார்கள். நாங்களும் ஆலயம் வந்து மாதாவிடம் ஜெபம் செய்தோம். எங்கள் நம்பிக்கை வீண்போகவில்லை. அழகான ஆண் குழந்தையைக் கொடுத்த மாதாவிற்கு நன்றி. மருத்துவம் கொடுக்க இயலாத பலனை மாதாவின் வரத்தினால் பெற்றோம். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மணிகண்டன் - கேளம்பாக்கம்**

பல வருடங்களாக நான் ஆலயத்திற்கு வருகின்றேன். எனக்கு வியாபாரத்தில் மிகுந்த நஷ்டம். கடன் பிரச்சனையால் மன உளைச்சலுக்கு ஆளானேன். விரைவிலே என் பிரச்சனைகள் தீர்ந்து நலமடைவேன் என்று நம்பினேன். மாதாவிடம் என் குறைகளை எடுத்து சொன்னேன். சிறிதுசிறிதாக என் குறைகளை தீர்த்து வைக்கிறார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**கிரேசி - சோழிங்கநல்லூர்**

நான் ஐந்து வருடகாலமாக இந்த பங்கில் உள்ளேன், எனக்கு முதல் ஆசிர்வாதம் இரண்டு பிள்ளைகள். அவர்கள் ஜீவமாதாவின் அருளால் பிறந்த குழந்தைகள். அதற்காக நன்றி கூறுகிறேன். மேலும் நாங்கள் இசை வகுப்பு நடத்துகின்றோம். நான் மாதாவிடம் விண்ணப்பம் செய்தேன் மாணவர்கள் வரவேண்டுமென்று. அம்மா கருணையால் 50 மாணவ மாணவிகள் சேரும்படி எனக்கு உதவினார்கள். மாதாவிற்கு நன்றி. என் தோழி கனடாவில் இருக்கின்றாள். அவள் ஜீவமாதாவைப் பற்றி அறிந்து குழந்தைக்காக மன்றாடிய போது குழந்தை பிறந்துள்ளது. நம்பிக்கையோடு மன்றாடினால் மாதா நமக்காக அறைவனிடம் பரிந்து பேசி வரம் பெற்றுத் தருவாள் என்பதற்கு நான் ஒரு சாட்சி. என் நண்பரின் பிள்ளைகள் இறுதி வருடத் தேர்வுக்கு கட்டணம் செலுத்த முடியாமல் தவித்தார்கள். அதற்கு நான் ஜீவமாதாவிடம் விண்ணப்பம் செய்தேன். மாதாவின் அருளால் அவர்கள் தேர்வு எழுதினார்கள். என் விண்ணப்பத்திற்கு கனிவுடன் செவிசாய்த்த அம்மாவுக்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சந்தா செலுத்துபவர்கள், மணியார்டர் மூலமாகவோ, வங்கி கணக்கு மூலமாகவோ, Google Pay மூலமகாவோ செலுத்தலாம். தகவல்கள் இரண்டாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. Google Pay மூலம் பணம் செலுத்துபவர்கள் உங்கள் முகவரியை 8122795035 என்ற எண்ணுக்கு வாட்ஸ் அப் குறுஞ்செய்தியாக அல்லது சாதாரண குறுஞ்செய்தியாக அனுப்ப கேட்டுக் கொள்கின்றோம்**



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

திருமதி. கிரேசி
சோழிங்கநல்லூர், சென்னை

நவம்பர் மாதம் 5 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். வழக்கம்போல பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**செலின் நெப்போலியன் – சோழிங்கநல்லூர்**

என் சித்தி மகளுக்கு திருமணமாகி 3 வருடங்கள் ஆகிறது குழந்தை இல்லை. ஒரு வருடத்திற்கு முன்பே தம்பி மனைவி எனக்கு போன் செய்து எனக்கு குழந்தை இல்லையென்றும் தைராய்டு பிரச்சனை வேறு இருக்கின்றது. இதனால் நான் நிறைய மருத்துவ சோதனைகள் செய்தும் எனக்கு எந்த பலனும் இல்லை என்று கூறினாள். நான் மிகுந்த தைரியம் கொடுத்து ஜீவமாதாவிடம் ஜெபம் செய் என்றேன். அவர்கள் தென்காசியில் இருப்பதால் அவளால் இங்கு வர இயலவில்லை. ஆனால் நான் நம்பிக்கை ஊட்டினேன். நானும் மாதாவிடம் ஜெபம் செய்தேன். இந்த வருடம் அவள் கருவுற்றாள். அதேபோல் சுகப்பிரசவம் அடைந்ததற்காகவும் நவம்பர் மாதம் ஜீவ மாதா நவநாளில் ஆண் குழந்தை பிறந்ததற்கும் நன்றி கூறுகிறோம். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மங்கள செல்வி – சைதாப்பேட்டை**

என் மகளுக்கு திருமணமாகி ஏழு வருடங்கள் கடந்தும் குழந்தை இல்லை. என் பக்கத்து வீட்டு தோழி மூலம் ஜீவமாதாவைப் பற்றி தெரிந்து கொண்டேன். நான் மாதாவிடம் விண்ணப்பம் செய்தேன். மாதாவின் அருளால் என் மகளுக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. குழந்தை வரம் தந்த ஜீவமாதாவிற்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மனோ, மோனிக்கா – நெசப்பாக்கம்**

நாங்கள் நெசப்பாக்கம் பங்கிலிருந்து வருகிறோம். எங்களுக்கு திருமணமாகி 3 வருடங்கள் கடந்தும் குழந்தை இல்லை. மருத்துவம்





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



ஒரு தாய் தனது சிறுவயது மகனிடம் இரண்டு ஆப்பிள் வாங்கிவந்து கொடுத்தார். பிறகு மகனிடம், நீ இரண்டு ஆப்பிள் வைத்திருக்கிறாய் அல்லவா, அதில் ஒன்றை எனக்குக் கொடு'' என்று கேட்டார். சிறுவன் அம்மாவை பார்த்துவிட்டு ஆப்பிளைக் கடித்து சுவைக்க ஆரம்பித்தான், மற்றொரு ஆப்பிளை தனக்கு கொடுப்பான் என்று அந்த அன்னை எதிர்பார்த்தாள் . ஆனால் சிறுவன் மற்றொரு ஆப்பிளையும் கடித்து சுவைத்தான். தான் கேட்டபிறகும் மகன் தரவில்லையே என்று அம்மா மிகுந்த வருத்தப்பட்டாள். சிறுவன் “ அம்மா இதோ இந்த ஆப்பிளை சாப்பிடு'' என்று ஒரு ஆப்பிளைக் கொடுத்தான். தாய் அவனிடம், “நீ கடித்து சாப்பிட்ட பிறகு எனக்கு தருகிறாய்? என்று கேட்டார். அதற்கு அவன் “இரண்டில் எது மிக சுவையுடையது என்று கடித்துப் பார்த்தேன், இதுதான் மிகுந்த சுவையுடையது, எனவே இதை உங்களுக்கு தருகிறேன்'' என்றான். அந்த அம்மா மிகுந்த மகிழ்ச்சியால் புன்னகைத்தாள்.

டிசம்பர் மாதம் 8-ம் தேதி ‘மரியாள் அமல உற்பவி’ என்ற பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். எந்த ஒரு மனிதரும் தன்னுடைய தாயைத் தேர்ந்தெடுக்க முடியாது. இயேசு தன்னுடைய தாயைத் தேர்ந்தெடுத்தார். எனவே தன்னுடைய தாய் மிகச் சிறந்தவராக இருக்கவேண்டும் என்று ஆவல்கொண்டார். ஆகவே தன் தாய்க்கு “அமல உற்பவி'' என்ற ஒரு மிகப் பெரிய பரிசைக் கொடுத்தார். அதாவது, மரியாள் தாயின் கருவில் உருவான நேரம் முதலே ஆதிப்பாவத்திலிருந்து மீட்கப்பட்டார் என்று பொருள். ஆகவேதான் எலிசபெத்தம்மாள் தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டபோது “பெண்களுக்குள் நீ ஆசிப் பெற்றவர்'' ( லூக் 1:42) என்று வாழ்த்தினார். இறையியல் வல்லுநர் டன்ஸ் ஸ்காட்டஸ் “அமல உற்பவத்தை'' பற்றி கூறும்போது “இறைவனால் அதை செய்ய முடியும், அது ஏற்புடையதாக இருக்கிறது. எனவே அவர் அதைச் செய்தார்'' என்று கூறுகிறார்.

மரியாள் அமல உற்பவி என்று கொண்டாடும் நாம், அவரைப்போல தூயவர்களாக வாழ முயல வேண்டும். மரியாள் அருளால் நிரப்பப்பெற்றார். நாமும் திருவருட்சாதனங்களால் கடவுளின் அருளை நிறைவாகப் பெற்றுள்ளோம். ஆகவே, அமல அன்னையின் பரிந்துரையை நாடி, தூய வாழ்க்கை வாழ முயலுவோம்.

# தூய கன்னி மரியாவின் அமல உற்பவம்

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

அன்னை மரியாவைப் பற்றிய நான்கு மறை உண்மைகளை திருஅவை தன் மக்களுக்கு வழங்கியுள்ளது. 1. மரியா இறைவனின் தாய், 2. அவர் எப்பொழுதும் கன்னி. 3. அவர் அமல உற்பவி 4. அவர் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்பதாகும். ஆண்டுதோறும் டிசம்பர் எட்டாம் நாள் நமது அன்னை மரியாவின் அமல உற்பவத்திற்கு விழா எடுத்து சிறப்பிக்க தாய்த் திருஅவை நம்மை அழைக்கிறது. முதல் பெற்றோரின் பாவத்தின் விளைவாக அனைவரும் பிறப்புநிலை பாவத்தோடு பிறக்கின்றோம். ஆனால் மரியா இப்பாவமின்றி பிறந்தார். இது இறைவன் அவருக்கு வழங்கிய சிறப்பான கொடை. சிறப்பான அருள். இந்த அருள் வரத்தோடு அவர் முழுமையாக ஒத்துழைத்ததால் அருளுக்கு மேல் அருளால் நிரப்பப் பெற்றிருந்தார். பாவத்தின் நிழல் கூட அவரை அணுகவில்லை. தனது தாயின் உதரத்தில் கருவாக உருவாகுமுன்னே அமல உற்பவியாக அவரைப் பிறப்பிக்க இறைவன் திருவுளம் கொண்டார். இவ்விழா நமக்கு பல உண்மைகளை எடுத்தியம்புகிறது. பல பாடங்களைக் கற்றுத் தருகிறது. அவற்றை நமதாக்கி, வாழ்வாக்கி, அன்னையின் உண்மையான மக்களாக ஒளிர்வோம் மிளிர்வோம்..

புனித மரியாவின் அமல உற்பவத்தைப் பற்றிய அறிக்கையை திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் 1854 ஆம் ஆண்டு, டிசம்பர் எட்டாம் நாள் வெளியிட்டார். “மிகவும் பேறுபெற்ற கன்னி மரியா, கருவான முதல் நொடியிலிருந்தே எல்லாம் வல்ல இறைவனுடைய தனிப்பட்ட அருளாலும், சலுகையாலும் மனித குலத்தின் மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் பேறுபலன்களை முன்னிட்டு சென்ம பாவத்தின் எல்லா கறையினின்றும் விடுவிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டார். இக்கோட்பாடு இறைவனால் வெளிப்படுத்தப்பட்டதாகும். எனவே, இது எல்லா விசுவாசிகளாலும் உறுதியாக இடைவிடாது விசுவாசிக்கப்பட வேண்டும் என்பதை நாம் அறிக்கையிடுகிறோம் அறிவிக்கிறோம்; வரையறுக்கிறோம். 1858 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 11-ம் தேதியிலிருந்து 16 ஆம் தேதி வரை லூர்து அன்னை பெர்னதத்துக்கு 18 முறை காட்சி தந்துள்ளார். இச்சமயத்தில் பெர்னதத், ‘அம்மா தங்களுடைய பெயர் என்ன?’ என்று கேட்கும்போது 16 வது காட்சியில் ‘நாமே அமல உற்பவம்’ என்று கூறினார். திருஅவையில் இவ்வறிக்கையை வெளியிட்டு நான்காவது ஆண்டு நிறைவு பெறும் வேளையில் அதை உறுதிப்படுத்தும் வண்ணம் அன்னை ‘நாமே அமல உற்பவி’ என்று கூறியது திருச்சபையின் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வு ஆகும்.

இறைவன் நித்தியத்திலிருந்தே மீட்பின் வேலையைத் திட்டமிட்டு, மரியாவை மெசியாவின் தாயாகக் குறித்தார். தூய்மையான இறைவன், மனுவாக ஒரு பெண்ணின் உதரத்தில் கருவாக உருவாக நினைத்தார். அப்பெண்ணை பாவத்தின் நிழல் கூட அணுகாது இருக்க அன்னாவின் வயிற்றில் அமல உற்பவியாக ஜெனித்தார். இறைவன் தம் அருள் வரங்களால்





கடந்தகாலக் கவலைகள் சோகம்
தோல்விகள் அனைத்தும் அசைபோடா திருக்க
இயேசு குழந்தாய்.....!
எம் இதயத்தில் பிறப்பாய்
சூது பொறாமை பொய் கோபத்தினோடு
வஞ்சமும் பகைமையும் எம்மிலே நீங்க
பேராசை என்னும் பேயினை விரட்ட
நான் எனது எனக்கு என்னும்
தன்னலம் ஒழித்துப் பிறர்நலம் பேண
மற்றவர் மிகவும் தாழ்ந்தவர் என்றே
எண்ணும் இழிகுணம் இல்லாமல் போக
‘உயர்ந்தவன் நான்’ எனும் தலைக்கனம் இறங்க
‘சொல்’ எனும் தீயால் அடுத்தவர் மனத்தை
சுட்டே எரிக்கும் கணத்தினை மாற்ற
இயேசு குழந்தாய்....!
எம் இதயத்தில் பிறப்பாய்.

### குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.

1 விண்ணுலகில் இருக்கிற 3 அருள் நிறை மரியே தந்தைக்கும் மகனுக்கும்

# எம் இதயத்தில் பிறப்பாய்

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

ஆதாம் ஏவைசெய் பாவம் பின்தொடர
அதனைப் போக்கி உலகினை மீட்க
அன்னை மரியின் கருவினில் உதித்து
அன்பாய் எம்மை அணைத்திட வந்த
இயேசு குழந்தாய்.....!
எம் இதயத்தில் பிறப்பாய்

அன்பே மூச்சாய் அன்பே அசைவாய்
அன்பே பேச்சாய் அன்பே செயலாய்
அன்பே வாழ்வாய் அனைவரும் வாழ
பண்பான இனிய இதம்தரும் சொல்லால்
அயலார் மனத்தை மகிழ்வித்து மகிழ
பதில் அன்பு நோக்கா அன்பினைப் பொழிய
எம் இதயத்தில் பிறப்பாய்

ஒவ்வொரு நாளும் நன்மையே செய்ய
பேச்சிலும் செயலிலும் உண்மையைப் போற்ற
அனைத்து உயிரையும் அருளுடன் நோக்க
யாமே எம்மை முழுமையாய் அறிய
இறுக்கமான வாழ்க்கையை விடுத்து
மகிழ்ச்சிப் பெருக்கால் சிரித்துக் கொண்டிருக்க
சிரிப்பின் அழகினில் உம்மையே காண
இயேசு குழந்தாய்......!
எம் இதயத்தில் பிறப்பாய்

குடும்ப வாழ்வில் ஈகோவை விடுத்து
ஒருவரை ஒருவர் மன்னித்து வாழ
வயது முதிர்ந்த பெற்றோர் தம்மை
அருகே வைத்து அன்புடன் நோக்க
வறுமையில் வாடும் ஏழையர் தமக்கு
உவந்து உதவும் மனத்தினை அருள





அவரை நிரப்பினார். மீட்பராம் இயேசுவின் பேறுபலன்களையும் அவர் பெற்றிருந்தார். கிறிஸ்து பிறப்பு அறிவிப்பு நாளன்று அவரின் ஆன்ம அழகைக் கண்டு "அருள் மிகப்பெற்றவரே வாழ்க" என்று கபிரியேல் தூதர் வாழ்த்தினார். இவ்வாழ்த்து இறைவனிடமிருந்து வந்தது. இந்த சொற்களை திருஅவையின் முதுபெரும் தந்தையர் அழகாக விரித்துரைக்கிறார்கள். "கன்னி மரியா அனைத்திலும், எக்காலத்திலும் தூய்மையாய் இருந்தார். தன் உற்பவத்திலும் மரியா தூய்மை உள்ளவராய் இருந்தார், வானதூதர்களை விட இவர் அதிக தூய்மை உள்ளவர். பாவக்கறை இவரை ஒருபோதும் அணுகியதில்லை. இவ்வாறு ஆதாம் ஏவாளின் கீழ்ப்படியாமையால் விளைந்த பிறப்புநிலை பாவமின்றி மரியா அன்னாவின் உதரத்தில் அமலியாய் உதித்தார்.

தூய கன்னி மரியா அமல உற்பவி என்ற நம்பிக்கை அறிக்கையை திருஅவை அறிவிப்பதற்கு அடித்தளமாக அமைவது விவிலியமேயாகும். மேலும் எட்டாம் நூற்றாண்டிலிருந்தே கிறிஸ்தவர்களிடையே இந்த நம்பிக்கையும், பக்தியும் இருந்து வந்ததாக திருத்தந்தையர்கள் ஒப்புக்கொள்கின்றனர். தொடக்க நூல் மூன்றாவது அத்தியாயம் 15 - வது இறைச் சொற்றொடர் புதிய ஏவையாம் மரியாவின் வருகையைச் சுட்டிக் காட்டுவதாக அமைகிறது. அவரின் மகன் இயேசு கிறிஸ்து, ஆதிப் பெற்றோரின் கீழ்ப்படியாமையால் விளைந்த பாவம், சாவு, நோய் அனைத்தையும் முறியடிப்பதையும் இங்கு காண்கிறோம். இத்தகைய மீட்புப் பணியில் மரியாவும், அவர் தம் மகனும் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி இறைத்திட்டத்தை தங்களின் கீழ்ப்படிதலால் நிறைவேற்றுவார்கள் என்பதையும் இப்பகுதி விளக்குகிறது. உலக மீட்பரின் தாயை அமல உற்பவியாக உதிக்கச் செய்தது ஆச்சரியமில்லை. ஏனெனில் இவரிடமிருந்து கிறிஸ்து மனித அவதாரம் எடுக்க வேண்டியிருந்தது. மனித உடலைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. இந்த மரியாதான் 'ஆம்' என்ற ஒரு சொல்லினால் மீட்பரை கருத்தாங்கினார்; புதிய ஏவையாக மாறினார். மீட்பின் பயன்களை அனைவரும் பெற்றுச்செல்லும் புதிய மரமாகினார். வாழும் அனைத்து உயிர்களுக்கும் தாயாகினார். முதல் ஏவையின் கீழ்ப்படியாமையால் விளைந்த பாவ முடிச்சுகளை இந்த ஏவை அவிழ்த்து எடுத்தார். இத்தகைய ஒப்பற்ற தாயை இறைவன் மாசு மருவின்று காத்தது அவரது பேரன்பை எண்பிக்கின்றது. அமல உற்பவம், மனுக்குல மீட்பரின் தாய் இறைவனிடமிருந்து பெற்ற அருளும் கொடையுமாகும். இந்தப் பெண்ணையே லூக்கா தமது திருவெளிப்பாடு நூலில் கதிரவனை ஆடையாக அணிந்திருந்ததாகவும், நிலாவைத் தன் காலடியில் கொண்டிருந்ததாகவும், பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்ததாகவும் காட்டுகிறார். தொடக்க நூலில் மீட்பரின் தாயாக வெளிப்படுத்தப்பட்ட பெண், இறுதி நூலில் திருச்சபை அடையவிருக்கும் மாட்சியை மரியா முழுவதும் அடைந்து விட்டதை அடையாளமாகக் காட்டுகிறார் லூக்கா. இவ்விதமாக இறையியலாளர்கள், மரியா, இறைவனின் பார்வையில் மேன்மை மிக்கவராக அவரின் கண்களில் பேறுபெற்றவராக, அருள்மிக்கவராக, தூய்மை நிறைந்தவராக இருந்ததை உணர்த்துகின்றனர்.

மேலும் இறைவாக்கினர் எசாயா கூறிய இறைவாக்கையும் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. "ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார், இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார் அக்குழந்தைக்கு அவர் 'இம்மானுவேல்' என்று பெயரிடுவார் (எசா 7-14). பழைய ஏற்பாட்டின் இந்த இரண்டு பகுதிகளும்

இறைவனின் மீட்புத்திட்டத்தில் ஒரு பெண் வகிக்கும் சிறப்பான இடம் வெளிப்படுவதாக திருச்சபை தனது நம்பிக்கை அறிக்கையில் வெளிப்படுத்துகிறது. கன்னி கருவுற்று ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தது இறைவனின் தெய்வீகச் செயல். இதை மனிதர்களால் புரிந்து கொள்ள முடியாது. இறைவாக்கினர் எசாயா வழியாக உரைக்கப்பட்ட இறைவனின் வாக்குறுதி மரியாவில் நிறைவேறுவதை திருச்சபை காண்கிறது.

அன்னை மரியாவின் அமல உற்பவம் நமக்கு உணர்த்தும் உண்மைகள் என்ன? மரியா பிறப்புநிலை பாவமின்றி பிறந்தார். நாம் நமது திருமுழுக்கின் போது பிறப்புநிலை பாவத்தினின்று விடுதலை அடைகிறோம். இறைவனின் அன்பு மக்களாகிறோம். மீட்பின் பயன்களைப் பெறும் உரிமை பெறுகிறோம்.

மரியா இறை அருளால் நிறைக்கப் பெற்றிருந்தார். அந்த அருள் வரங்களோடு ஒத்துழைத்தார். நமக்கும் அருள்வாழ்வின் அருள் வரங்கள் தரப்படுகின்றன. திருவருட்சாதனங்கள் வழியாக ஒவ்வொரு நாளும் அருள் வரங்களை அபரிவிதமாக பெற்றுக் கொண்டிருக்கிறோம். அதை உணர்கிறோமா? இறையருளோடு ஒத்துழைக்கின்றோமா? அருளுக்கு மேல் அருளைப் பெற்றுக்கொள்ள நமது உள்ளம் திறந்திருக்கின்றதா? எனது கிண்ணம் காலியாக இருக்கின்றதா? என் உள்ளத்திலுள்ள மேடுகள் சமமாக்கப்படுகின்றனவா? இறையருள் வெள்ளம் பாய்ந்தோடி வந்து நற்கனிகளை விளைவிக்க நமது உள்ளங்களை செம்மைப்படுத்துவோம்.

அன்னை மரியாவின் அமல உற்பவம், அவரின் ஒப்பற்ற தூய்மையை படம்பிடித்துக் காட்டுகிறது. இறை வார்த்தைக்கு மனுவுரு கொடுத்தார். அவரின் உடலும் உள்ளமும் தூய்மைக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தது. தூயவராம் இறைவனைத் தாங்கும் பேழையாக நடமாடி வந்தார். "தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்." நாம் இறைவனுக்கு அர்பணிக்கப்பட்டவர்கள். நமது உடலும் உள்ளமும் நறுமணம் வீசும் காணிக்கைப் பொருட்களாக இருக்க வேண்டும். நமது எண்ணங்கள், சொற்கள், செயல்கள் மாசு எதுவுமின்றி தூய்மையாக இருக்கின்றனவா? நமது உள்ளத்தில் இயேசு பிறக்க விரும்புகிறார். அவரைத் தாங்கும் மற்றொரு மரியாவாக மாற அழைப்பு விடுக்கிறார். நம்மை கறைபடுத்தும் சாதனங்கள், நிகழ்வுகள், உரையாடல்களை சீர்தூக்கிப் பார்ப்போம். தூய்மையை ஆடையாக அணிந்து கொள்ள மரியாவிடமிருந்து கற்றுக் கொள்வோம்.

அமல உற்பவி, தொடக்க நூலில் ஒரு போராட்டப் பெண்ணாகச் சித்தரிக்கப்படுகிறார். மரியாவும் அவரது மகனும் நிறைய போராட்டங்களை சந்திக்க வேண்டியிருந்தது. பல எதிர்ப்புகள், புறக்கணிப்புகள், அவமானங்கள் ஆகியவற்றை சந்திக்க வேண்டியிருந்தது. ஆயினும் இறைத்தந்தையின் மீட்புத் திட்டம் நிறைவேற வேண்டும். மனுக்குலம் மீட்பின் பயன்களை அனுபவிக்க வேண்டும். எனவே மீட்புத்திட்டத்தில் தமக்குள்ள பங்கை நிறைவேற்றுவதில் மட்டுமே இருவரும் முனைப்பாயிருந்தனர். நாம் நம்மை இறைவனுக்கு அர்ப்பணித்து விட்டதால் மட்டுமே இறையரசு மலரப் போவதில்லை. வெறும் கனவு காண்பது மட்டுமல்ல, அல்லது பாடல்களிலும் வழிபாடுகளிலும் மட்டுமே இறையரசு இடம் பெறுவது நமது அர்ப்பண வாழ்வு இன்னும் மலராத மொட்டுக்களாய், வாசத்தைப் பரப்பாமல் இருப்பதற்கு சமம். அமல உற்பவத்தின் அழகு கல்வாரியில் சிலுவையடியில் நின்றபோது ஒளிர்ந்து மிளிர்ந்தது. நமது அர்ப்பணம் சாட்சியுள்ளதாக மாற இறையாட்சியின் மதிப்பீடுகளை வாழ்வோம். இந்த மதிப்பீடுகள் நம்மைச் சுற்றி கட்டியெழுப்பப்பட நம்மை மீண்டும் கையளிப்போம்.





உடையவர்கள் தம்முடைய உடமையையும் பிறர்க்கு உரிமையாக்கி அர்ப்பண உள்ளத்தோடு வாழ்வார்கள். அன்பு உள்ளவர்கள் பிறருக்காக வாழ்கின்றார்கள். இதை திருவள்ளுவர்,

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு"**

என்று கூறுவார். அன்பு ஒரு மனிதனை தியாகியாக மாற்றுகிறது. யாரை அன்பு செய்கிறோமோ அம்மனிதருக்காக அனைத்தையும் தியாகம் செய்யத் தூண்டுகிறது.

"திருமணமான ஆண்களே, கிறிஸ்து திருச்சபை மீது அன்பு செலுத்தியது போல நீங்களும் உங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துங்கள். ஏனெனில் கிறிஸ்து திருச்சபை மீது அன்பு செலுத்தி, அதற்காக தம்மையே ஒப்புவித்தார்" (எபேசி 5:25) என்று தூய பவுலடியார் கூறுவார். குடும்பத்தில் கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் கிறிஸ்து திருச்சபையை அன்பு செய்ததுபோல அன்பு செய்ய வேண்டும். கிறிஸ்து தாம் அன்பு செய்த திருச்சபைக்காக தம்மையே கையளித்தார். தம் உயிரையே கையளிக்கும் அளவிற்கு கிறிஸ்து தம் சீடர்களை அன்பு செய்தார். இயேசு கிறிஸ்துவைப் போல கணவனும் மனைவியும் ஒருவர் மற்றவருக்காக தங்களையே தியாகம் செய்ய வேண்டும். தங்களுடைய விருப்பு, வெறுப்புக்களை, ஆசா பாசங்களை, நாட்டங்களை, ஒருவர் மற்றவருக்காக குடும்பத்தில் தியாகம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் குடும்ப வாழ்வு இனிமையாக இருக்கும்.

மரியா, யோசேப்பு, குழந்தை இயேசு வாழ்ந்த குடும்பத்தில் இத்தகைய தியாகம் நிறைந்த அன்பு இருந்ததை நாம் பார்க்க முடிகின்றது. ஒருவர் மற்றவரை அன்பு செய்தார்கள். ஒருவர் மற்றவருக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்தார்கள். மரியா தன் மகன் மீதும், கணவர் மீதும் அன்பு கொண்டு அவர்களுக்காக தன் வாழ்வையே முழுமையாக அர்ப்பணித்தார். புனித யேசேப்பு மரியா மீதும், குழந்தை இயேசு மீதும் கொண்டிருந்த அன்பினால் தன்னுடைய ஆசைகள் அனைத்தையும் தியாகம் செய்து துறவி போல கற்பு நெறி தவறாமல் வாழ்ந்தார். இயேசு கிறிஸ்து தன்னுடைய தாய் தந்தை மீது அன்பு செலுத்தி கீழ்ப்படிதலோடும், பொறுப்போடும் வாழ்ந்தார். குழந்தைப் பருவத்தில் ஓடி ஆடி விளையாடுவதை தியாகம் செய்து தன்னுடைய தந்தையின் தச்சுத் தொழிலில் அவருக்கு உதவி செய்தார்.

திருக்குடும்பத்தில் வாழ்ந்த மூவரும் கடவுளை முழுமையாக அன்பு செய்தார்கள். இறையன்புதான் அவர்களை ஒன்றாக இணைத்தது. அந்த இறையன்புக்காக அவர்கள் மூவருமே தங்கள் வாழ்வையே தியாகம் செய்தார்கள். மூவரும் இறைத் திட்டத்தை நிறைவேற்ற உலக ஆசைகள் அனைத்தையும் துறந்தார்கள். இத்தகைய தியாகம் நிறைந்த இறையன்பும், குடும்ப அன்பும்தான் அவர்களுடைய குடும்பத்திற்கு அழகு சேர்த்தது. நம்முடைய குடும்பத்திலும் அன்பு தளைத்தோங்குகின்றபோது, அந்த அன்பு தியாகம் நிறை அன்பாக இருக்கின்ற போது நம் குடும்பமும் திருக்குடும்பமாக மாறும். அன்பு செலுத்துவோம்; ஆசா பாசங்களை தியாகம் செய்வோம்; அழகான குடும்ப வாழ்க்கை வாழ்வோம்.



# குடும்ப வாழ்வில் மரியா 10

**அருள்பணி. கில்பர்ட்ராஜ் ம.ஊ.ச**
**சோழிங்கநல்லூர், சென்னை**

குடும்ப வாழ்வில் இருக்க வேண்டிய பண்புகளாக தூய பவுலடியார் கொலேசயருக்கு எழுதிய மடலில் குறிப்பிட்ட பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகள் மரியா குடும்ப வாழ்வில் எவ்வாறு இருந்தது என்பது குறித்து கடந்த இதழ்களில் சிந்தித்தோம். இப்பண்புகள் அனைத்துக்கும் அன்புதான் அடித்தளம். “இவையனைத்துக்கும் மேலாக, அன்பையே கொண்டிருங்கள். அதுவே இவையனைத்தையும் பிணைத்து நிறைவுபெறச் செய்யும்” (கொலே 3:14) என்று தூய பவுலடியார் கூறுகின்றார். குடும்ப வாழ்வின் அடித்தளமாக இருப்பது அன்பு. அன்பு இருந்தால் மேற்குறிப்பிட்ட அனைத்துப் பண்புகளும் நிலைத்து நிற்கும். மரியா குடும்ப வாழ்வில் அன்பு எவ்வாறு அனைத்தையும் தாங்கிப் பிடித்தது என்று சிந்திப்போம்.

**மரியா குடும்பத்தில் அன்பு**

கல்லாலும் மண்ணாலும் செங்கற்களாலும் மட்டும் ஒரு வீடானது கட்டப்படுவதில்லை. அன்பினாலேயே ஒரு வீடு கட்டப்படுகின்றது” என்பார் கவிஞர் நா. முத்துக்குமார். பல கோடிகளைக் கொட்டி பெரிய வீடு கட்டி நாம் குடிபுகலாம். ஆனால் அந்த வீட்டில் அன்பு இலலையென்றால் அந்த வீட்டுக்கு மதிப்பு இல்லை. அன்பு இல்லாத வீடு நரகமாகக் காட்சியளிக்கும். அதேபோல, நாம் பல்வேறு திறமைகளைக் கொண்டிருக்கலாம். நல்லதொரு வேலையில் இருக்கலாம். கை நிறைய சம்பாதிக்கலாம். ஆனால் நம்மிடம் அன்பு இல்லையேல் அதனால் எந்தப் பயனும் இல்லை. “நான் மானிட மொழிகளிலும் வானதூதரின் மொழிகளிலும் பேசினாலும்....இறைவாக்கு உரைக்கும் ஆற்றல் எனக்கு இருப்பினும், அறிவெல்லாம் பெற்றிருப்பினும்...என்னிடம் அன்பு இல்லையேல் நான் ஒன்றுமில்லை” (1கொரி 13:1-2) என்று தூய பவுலடியார் அழகாக குறிப்பிடுகின்றார்.

“வாழ்வின் உண்மையான பொருள், அன்பு செலுத்துவதிலும், அன்பு செலுத்தப்படுவதிலுமே பொதிந்துள்ளது” என்று புனித அன்னை தெரசா கூறுவார்கள். அன்பு இருக்கின்றபோது பரந்த கருணை உண்டு. தலைக்கணம் அறவே இருக்காது. தீமைகளையும், தவறுகளையும் இனங்கண்டு அவற்றைத் திருத்தியும், பொறுத்தும் அருள்வது அன்பு மட்டும்தான்.

அன்பு இல்லாதவர்கள் சுயநலவாதிகளாக எல்லாவற்றையும் தமக்கே உரிமையாக்கிக் கொண்டு வாழ்வார்கள். ஆனால் அன்பு





# அன்னையின் திருத்தலங்களை நோக்கி... 48

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



**புனித நற்றுணை அன்னை ஆலயம்,**
**(Our Lady of Guidance Chruch)**
**இராஜஅண்ணாமலைபுரம், சென்னை**

புத்துலகின் பழமையான நகரங்களில் முதன்மையானது சென்னை நகரமாகும். கிறிஸ்தவம் மேற்கு ஆசியாவையும், ஐரோப்பாவையும் தாண்டியிருக்காத காலங்களிலேயே பல்வேறு வளர்ச்சிகளை தன்னகத்தே கொண்டிருந்த சென்னை நகரில் கிறிஸ்தவம் வேரூன்றியிருந்தது. திருத்தூதர் தோமா தன்னுடைய நற்செய்தி அறிவிப்புப் பணியின் இறுதியில் சென்னையில் உள்ள சாந்தோம் வந்தார். தன்னுயிரை இயேசுவுக்கு சாட்சியாக இம்மண்ணில் ஈந்து அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார். இந்நிகழ்வுக்குப் பின் கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்த பலர் இப்பகுதியை கடந்து சென்றாலும், திருஅவையின் அமைப்பு சார் நிலைகள் ஏற்பட ஏறக்குறைய பதினைந்து நூற்றாண்டுகள் ஆயின. அவற்றில் ஒரு முக்கியமான நிகழ்வு இயேசு சபையின் முன்னோடிகளில் ஒருவரான பிரான்சிஸ் சவேரியார் சாந்தோம் பகுதிக்கு வருகை தந்ததாகும். கி.பி. 1545ஆம் ஆண்டு சாந்தோமுக்கு வந்த சவேரியார் ஏறக்குறைய மூன்று மாதம், புனித தோமாவின் கல்லறை அருகில் தங்கி, தன்னுடைய மறைபரப்பு பணியை செவ்வனே செய்ய தேவையான ஆசீர்வாதங்களுக்காக செபித்தார். இயேசு சபையினரோடு சாந்தோமுக்கு ஏற்பட்ட தொடர்பு புனித சவேரியரிலிருந்தே தொடங்குகிறது. அதுவும், இயேசு சபை அதிகாரப்பூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளிலேயே மைலாப்பூர் பகுதியில் முதல் இயேசு சபை குரு வந்தது ஒரு வரலாற்று நிகழ்வாகவே அமைகிறது. தான் தங்கியிருந்த காலத்தில்



பல்வேறு நபர்களுடன் உரையாடிய அவர், அவர்களின் ஆன்மீகத் தேவைகளுக்காக குருக்கள் தேவை என்பதை உணர்ந்து கொண்டார். அவர்கள் மத்தியில் பணிபுரிய குரு ஒருவரையும் அனுப்பி வைப்பதாக வாக்குறுதி தந்தார். தன் வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக, கி.பி. 1547ஆம் ஆண்டு அருட்பணி. அல்போன்ஸோ சிப்ரியன் என்கிற இயேசு சபை துறவியை சாந்தோமுக்கு அனுப்பி வைத்தார். அருட்பணி. அல்போன்ஸோ அங்கிருந்து மற்றொரு குருவானவருடன் இணைந்து சாந்தோமில் வசித்து வந்த போர்த்துக்கீய கிறிஸ்தவர்களுக்கு பல பணிசெய்தார். பின், கி.பி. 1575ல் சாந்தோம் வளாகத்தில் புதிய ஆலயம் கட்டப்பட்டபின், தமிழிலும், தெலுங்கிலும் புலமை வாய்ந்த இரு இயேசுசபை பணியாளர்கள் அங்கு பணியாற்றினர். கிறிஸ்தவ மக்களின் எண்ணிக்கை அதிகமாக, அவர்களின் ஆன்மீக தேவைகளுக்கு பெரிய ஆலயம் ஒன்று அவசியமாகியது. எனவே, சாந்தோம் வளாகத்துக்கு வெளியே, ஒரு ஆலயம் கட்டப்பட்டு இறைவனின் தாய் அன்னைமரியாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்த ஆலயமானது கி.பி. 1576ஆம் ஆண்டு செப்டம்பர் 8ஆம் நாள் அர்ச்சித்து புனிதப்படுத்தப்பட்டது. இந்த ஆலயம் இறைவனின் தாய் என்று பொருள்படும் மாதா் தேயுஸ் என்றழைக்கப்பட்டது. மக்களின் எண்ணிக்கை அதிகமாக, இந்த ஆலயம் பெரிய பள்ளி தெரு வரை கிழக்கு நோக்கி விரிவாக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டது. இயேசு சபையின் வேதபோதகர்களின் முக்கியமானவரும், தத்துவ போதகர் என்றும் அழைக்கப்பட்ட அருட்பணி. இராபர்ட் தே நோபிலி (கி.பி. 1648- கி.பி. 1656) தன்னுடைய இறுதி நாட்களில் இங்கு வாழ்ந்தார். அவரது மறைவுக்குப் பின்





## தேவனின் தாய் அல்லது தாய்த் தெய்வமா?



இறைவனின் தாய் என்பதை மரியாவிற்கு உரிய இன்னொரு சிறப்பு பெயராக மட்டும் சங்கம் கருதவில்லை. ஏனென்றால் மரியாவை இறைவனின் தாய் என ஏற்பதோ அல்லது மறுப்பதோ வெறும் மரியியல் பிரச்சனை அல்ல. அடிப்படையில் அது ஒரு கிறிஸ்தியல் பிரச்சனை. அதாவது மரியா யார் என்பதை விட இயேசு கிறிஸ்து யார் என்பதே இப்பிரச்சனைகளின் ஆழத்தில் இருக்கும் அடிப்படையான கேள்வி.

மரியா இறைவனின் தாய் அல்ல. மாறாக, இயேசு என்னும் மனிதனின் தாய் மட்டுமே என்றார் நெஸ்தோரியஸ் அப்படியெனில் இயேசு இறைவன், மனிதன் என இரு ஆட்களாக பிளவுபட்டு நிற்கிறார் எனக் கருதும் நிலை ஏற்படுகிறது. இயேசு இறைவனும் மனிதனும் ஒன்றித்த ஒரே ஆள் என்பதால், அந்த ஆளுக்கு மரியாதான் தாய். எனவே அவர் இறைவனின் தாய் என்பதை மறுக்கத் தேவையில்லை. இதனால்தான் திருச்சங்கமும் "மெய்யான ஒன்றிப்பில் இணைக்கப் பெற்ற இரு இயல்புகளும் தனித்தனியானவை. எனினும் இவை இரண்டிலிருந்து ஒரே கிறிஸ்து, ஒரே மகனே உள்ளார்" என வரையறுக்கிறது. இயேசுவின் இரு இயல்புகளும் இணைந்த ஒரே ஆளுமையை வலியுறுத்துகின்றது. இவ்வாறு, இயேசுவின் பிறப்பு அவரது மனிதத் தன்மைக்கு மட்டுமே உரியது எனினும் அவர் மனிதத் தன்மையுடைய இறைவன் என்பதால் இறைவன் பிறந்தார் ஏனறும் மரியாவை இறைவனின் தாய் என்றும் சொல்ல முடியும். இந்த அர்த்தத்திலும் அடிப்டையிலும்தான் கிறிஸ்தவம் மரியாவை இறைவனின் அன்னை என அழைக்கின்றதே அன்றி அ ன்னை தெய்வம் என்னும் பொருளில் அல்ல. ஆம், மரியா தேவனின் தாயே அன்றி தெய்வீகத் தாய் அல்ல.

எங்களின் அனைத்து ஆபத்துகளிலிருந்தும் காப்பாற்றும்''. இது வரலாற்று சிறப்பு மிக்க பாடல். மாதாவின் புகழ்ச்சிப் பாடல். மாதாவின் மீது கொண்டுள்ள ஆழ்ந்த நம்பிக்கையின் பாடல். இது திருவழிபாட்டுப் பாடல். இப்பாடலில் தொடக்க காலத் திரு அவை மரியா மீது கொண்டிருக்கும் அன்பையும், நம்பிக்கையும், பக்தி வணக்கத்தையும் காட்டுகிறது. இச்சிறிய பாடல் உணர்த்தும் பாடங்கள் மிகப் பெரிது.

1. மரியா புனிதமானவர் ( அமல உற்பவ கோட்பாடு)
2. மரியா இறைவனின் தாய் ( கடவுளின் தாய் கோட்பாடு)
3. மரியா என்றும் கன்னியானவர் (கன்னிமை கோட்பாடு)
4. மரியா மகிமையுடன் என்றும் விளங்குகின்றார். (விண்ணேற்பு கோட்பாடு )
5. மரியா நம்பிக்கையாளர்களின் அடைக்கலம் (பரிந்துரையாளர்)
6. மரியா நமக்காக செபிக்கின்றார்.

மேற்கண்ட பாடலைப் பற்றி முந்தைய இதழ்களில் விரிவாக படித்திருக்கின்றோம்.

நான்காம் நூற்றாண்டில் புனித அந்தாசியா, நசியன்சன் கிரகோரியார் என்போர் இப்பெயரால் மரியாவை அடிக்கடி குறிப்பிடுகின்றனர். ஐந்தாம் நூற்றாண்டில் இருந்துதான் மிகவும் பரவியது. அதற்கு முக்கிய காரணம் 431 –ம் ஆண்டில் எபேசு நகரில் கூடிய பொதுச்சங்கம் மரியா இறைவனின் அன்னை என அறிக்கையிட்டதுதான். இச்சட்டத்தின் பின்னணி மரியா இறைவனின் அன்னை என்பதை நெஸ்தோரியாசு மறுத்ததும் அலெக்சாந்திரியா நகர் சிரில் என்பவர் அதனை ஆதரித்தும் குரல் கொடுத்ததும். இந்த இரு பெரும் ஆயர்களுக்கு இடையே எழுந்த கருத்து வேறுபாடு விரைவில் அந்தியோக்கு, அலெக்சாந்திரியா நகர்களைச் சார்ந்த சபைகளுக்கும் இறையியலாருக்கும் இடையிலான பெரிய ஒரு பிரச்சினையாக வளர்ந்து நின்றது. இதனைத் தீர்க்கவே கூடியது எபேசு பொதுச்சங்கம். அதில் சிரிலின் கருத்து ஏற்கப் பெற்றது. நெஸ்தோரியுசு கண்டிக்கப்பட்டார்.





இப்பகுதியில் நல்லடக்கம் செய்யப்பட்டார். இந்த ஆலயம் இன்றும் தியான ஆசிரமத்தில் உள்ளது. விஜய நகர மன்னர்களின் உதவியோடு இப்பகுதியில் ஒரு கல்லூரியும் ஆரம்பிக்கப்பட்டது. அவ்விடத்தில் தான் தற்போது அடைக்கல அன்னை சகோதரிகளின் துறவு இல்லம் உள்ளது.

கி.பி. 1581ஆம் ஆண்டு இறைவனின் அன்னை ஆலயத்தின் கிளை ஆலயமாக நற்றுணை அன்னை சிற்றாலயம் அருட்பணி. ரிபேரியோ அவர்களால் கட்டப்பட்டது. கி.பி. 1637ஆம் ஆண்டு மனுவேல் மதேரா மற்றும் அவரது தாயாரால் இந்த ஆலயம் விரிவாக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டது. இந்த நற்றுணை ஆலயத்தின் வரலாறு மதராஸ் நகர் ஏன் அப்பெயரை பெற்றது என்பதற்கான விளக்கத்திற்கும் வழி வகுக்கிறது. போர்த்துக்கீசிய தனவந்தர்களான மதரா குடும்பம் சாந்தோம் பகுதியில் வசித்து வந்தது. பெரும் செல்வந்தர்களாக இருந்த இவர்கள் இப்பகுதியில் இந்த ஆலயம் கட்டியதாலும், பெரும் நிலப்பரப்பை மக்கள் பயன்பாட்டிற்கு அளித்ததாலும் அப்பகுதியானது, இக்குடும்பத்தினரின் நினைவாக மதராஸ் என்றழைக்கப்பட்டிருக்க வேண்டும். அத்துடன், அப்பகுதியில் கிறிஸ்தவ மறையைத் தழுவிய மீனவர்கள் அதிகமாக வாழ்ந்தனர். கிறிஸ்தவர்களாக மாறியிருந்த மீனவ குப்பத்தின் தலைவர் மதராசன் என்றழைக்கப்பட்டார். இக்கூற்றானது கர்னல் லோவ் அவர்களால் எழுதப்பட்ட மதராஸின் பழம் பெருமைகள்



1640-1800" என்ற நூலிலும் எழுதப்பட்டுள்ளது. கிழக்கிந்திய கம்பெனியின் ஏஜென்டான பிரான்சிஸ் டே அவர்களுக்கு இடம் வாங்கித் தந்த பேரி திம்மப்பா அவர்கள் இடம் வாங்கிய காலத்தில் அப்பகுதியானது மீனவர் குப்பமாக இருந்தது. இடம் வழங்க மறுத்த மீனவர் குப்ப தலைவர் மதராசன் என்பவரின் தோட்டமும் அப்பகுதியில் இருந்தது. பேரி திம்மப்பா அவர்கள் மதராசன் அவ்விடத்தை விற்க ஒப்புக்கொண்டால், கம்பெனியாரிடம் சொல்லி அவ்விடத்திடத்திற்கு மதராசப்பட்டனம் என்று பெயர் வைப்பதாக சொன்னார் என்ற குறிப்பும் மேற்கண்ட புத்தகத்தில் உள்ளது.




TOMBSTONE AT SAN THOME, RECENTLY DISCOVERED

—By Courtesy of Rev. Mother Superior, St. Thomas Convent.

நற்றுணை அன்னை ஆலயம் தொடர்ந்து இறைவனின் அன்னை ஆலய பங்கின் கிளை பங்காகவே இருந்தது. கி.பி. 1928ஆம் ஆண்டு மயிலை மறைமாவட்டத்தின் முதன்மைகுரு அருட்பணி. யு.ஆ. தெக்ஸேரா அவர்கள் புதிய ஆலயம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டினார். அங்ஙனம், புதிய ஆலயத்திற்கான பணிகள் நடந்து கொண்டிருந்த போது கிடைத்த கல்லறையில் இருந்த போர்த்துக்கீசிய கல்வெட்டானது மதரா குடும்பம் அங்கு இருந்ததற்கான சாட்சியமாக அமைந்துள்ளது.

கோதிக் கட்டிட கலையிலும், சாந்தோம் புனித தோமையார் ஆலயத்தின் பிரதிபலிப்பாக இந்த ஆலயம் கட்டப்பட்டுள்ளது. சிலுவை வடிவில் கட்டப்பட்டுள்ள இந்த ஆலயத்தின் மையத்தில் சிறிய கோபுரமும், ஆலய முகப்பில் இரட்டை கோபுரமும் அமைந்துள்ளன.

கி.பி. 1954ஆம் ஆண்டு பெப்ரவரி 26ஆம் நாள் உரோமை மறைபரப்பு பேராயம் வெளியிட்ட ஆணையின்படி அதுவரை லாசரஸ் சர்ச் என்றழைக்கப்பட்ட இந்த ஆலயம் இனி நற்றுணை அன்னையின் ஆலயம் என்றழைக்கப்படும் என்ற ஆணை வெளியானது. அதுவரையில், மாதர் தேயுஸ் ஆலயத்தில் இருந்த நற்றுணை





# மரியா - கடவுளின் கடிதம் 17



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## இறைவனின் தாய்

"இறைவனின் தாய்" எனவும் மரியா கிறிஸ்தவ மரபில் அழைக்கப்பெறுகிறார். அவருடைய சிறப்புப் பெயர்களில் இதுவே மிகவும் உயர்ந்தது. திருச்சபையின் மிகச் சிறந்த ஆசிரியமாகிய பொதுச்சங்கம் ஒன்றால் இது நம்பிக்கை கோட்பாடு என வரையறுத்து வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தலைப்பில் நாம் நிறைய படித்து அறிந்திருக்கின்றோம். பல கட்டுரைகள் இந்த "ஆகட்டும்" இதழ்களிலே வந்திருக்கிறது. எனவே இத்தலைப்பைப் பற்றி நிறைய எழுத தேவையில்லை என நினைக்கின்றேன். மிக முக்கியமான ஒரு சில கருத்துக்களை மட்டும் பதிவிடுகிறேன்.


"இறைவனின் அன்னை" அல்லது "தேவதாய்" என்னும் சிறப்புப் பெயர் எங்குமே இடம்பெறவில்லை. எனினும் அதற்கு சமமான "ஆண்டவரின் தாய்" விவிலியத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. எலிசபெத் மரியாவை வாழ்த்தும்போது "என் ஆண்டவரின் தாய்" (லூக் 1:43) என்று வாழ்த்துகின்றார். "ஆண்டவர்" -ன் தமிழாக்கம் பெறும் கூரியோசு (Kyrios- KÚPIOG) என்னும் சொல்.

கிறிஸ்தவ மரபினை நோக்கும்போது முதல் இரண்டு நூற்றாண்டுகளில் "கடவுளின் தாய்" என யாரும் மரியாவை அழைத்ததாகத் தெரியவில்லை. ஆனால் மரியாவை நோக்கி எழுப்பட்ட பாடல் "subtuum presidium confugimus" என்ற பாடல்

"ஓ புனிதமிக்க இறைவனின் தாயே!
எம் தேவைகளின் நேரத்தில் உம்மிடம்
அடைக்கலம் தேடி வந்திருக்கும்
எங்கள் வேண்டல்களை புறக்கணியாதேயும்.
ஓ என்றும் மகிமையுடன் விளங்கும் கன்னிகையே!



# முத்திப்பேறு பெற்ற போனவென்தூரா OSM



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

1276 ஆம் ஆண்டில், புனித பிலிப் பெனிசி பிசாவிற்கும் (Pisa) புளோரன்ஸுக்கும் (Florence) இடையில் உள்ள பிஸ்தோயாவிற்கு (Pistoia) வந்து, மரியின் ஊழியர் சபை பொதுப் பேரவைக்கு தலைமை தாங்கினார். இந்தக் காலக்கட்டத்தில் பிஸ்தோயாவில் உள்ள மக்கள் இரண்டாக பிளவுபட்டு சண்டையிட்டு வந்தனர். அதில் ஒரு தரப்பினர் திருத்தந்தைக்கும், மற்றோரு தரப்பினர் அரசருக்கும் ஆதரவு அளித்ததால் அவர்களிடையே வாக்குவாதத்தில் ஆரம்பித்த சண்டை இறுதியாக ஒருவரை ஒருவர் கொலை செய்யும் அளவுக்கு பெரிதானது. இதில் அரசருக்கு ஆதரவு தந்து திருத்தந்தையை எதிர்த்தவர்தான் முத்திப்பேறு பெற்ற போனவென்தூர (Bonaventura of Pistoia). இவர் ஏறத்தாழ 1240 ஆம் ஆண்டு இதே நகரில் பிறந்தவர். இவர் போனக்கோர்சி (Bonaccorsi) என்கிற உயர் வர்க்க குடும்பத்தை சார்ந்தவர். மேலும், திருத்தந்தைக்கு எதிராக இருந்த ஒரு அரசியல் இயக்கத்தின் தலைவராக இருந்ததால் போனவென்தூர இந்த ஊரில் பிரபலமானவராக இருந்தார். புனித பிலிப் பெனிசி இத்தகைய சூழ்நிலையில் அமைதிக்காகவும் ஒருவர் மற்றவரை அன்பு செய்ய வேண்டும் என்று உறுதியுடன் எவ்வித பயமுமின்றி கலகக்காரர்களிடம் போதனை செய்தார். அவரது பார்வையாளர்களில் போனவென்தூரவும் ஒருவர். அமைதிக்காகவும் மற்றும் நல்லிணக்கத்திற்காகவும் புனித பிலிப் கூறிய அறிவுரைகளால் போனவென்தூர மிகவும் ஈர்க்கப்பட்டார், போனவென்தூர புனித பிலிப்பிடம் சென்று, அமைதியின்மையை ஏற்படுத்தியதாகவும், மிகுந்த துயரத்தையும் அநீதியையும் ஏற்படுத்தியதாக தன்னைத் தானே குற்றம் சாட்டி ஒப்புக்கொண்டார். தனது தவறுகளை ஏற்றுக்கொண்டு மன்னிப்பு கேட்டார். இது மட்டுமல்லாமல் தன்னுடைய மன மாற்றத்தை உறுதிப்படுத்தும் விதமாக தன்னையே மரியின் ஊழியரின் சபைக்கு அர்ப்பணிக்க முடிவு செய்தார். அத்தகைய திடீர் மாற்றத்தை புனித பிலிப் முழுமையாக நம்ப முடியவில்லை. எனவே, மரியின் ஊழியர் சபைக்கு போனவென்தூரவை தேர்வுசெய்வதற்கு முன்பு, ஒரு சில பரிகாரங்கள் செய்யும்படி கேட்டார். போனவென்தூர அனைத்தையும் மிகவும் விருப்பத்துடன் செய்தார். இவ்வாறு நன்றாக போனவென்தூரவை சோதித்தபின், புனித பிலிப் அவரை மரியின் ஊழியர் சபையில் ஏற்றுக் கொண்டார். போனவென்தூர குருவாக திருநிலைப்படுத்தப்பட்டபின், புனித பிலிப்புக்கு மிகவும் உறுதுணையாக இருந்தார்: எடுத்துக்காட்டாக, நமது மரியின் ஊழியர் சபைக்கு திருத்தந்தையிடமிருந்து ஒப்புதல் பெறுவதற்காக புனித பிலிப்போடு சேர்ந்து பணியாற்றினார். மேலும், பல நகரங்களிலும், அவரது சொந்த ஊரில் நடந்தது போலவே திருத்தந்தையை சார்ந்தவர்களுக்கும், அரசரை சார்ந்தவர்களுக்கும் சண்டை உருவாகும் போது தன்னுடைய போதனையின் மூலம் அமைதியையும் அன்பையும் பரப்புவதற்காக சென்றார். புனித பிலிப் பெனிசி இறந்த பின்பும் அவர் விட்டுச் சென்ற அனைத்து நல்ல செயல்களையும் முன்னெடுத்துச் சென்றார். இவர் 1315 ஆம் ஆண்டு இயற்கையெய்தினார். 1822 ஆம் ஆண்டு இவருக்கு முத்திப்பேறு பட்டம் கொடுக்கப்பட்டது. இவரை இந்த புனித நிலைக்கு உயர்த்தியது அவருடைய மனமாற்றமும், அந்த மனமாற்றத்தில் நிலைத்திருந்ததும்தான். நம்முடைய வாழ்வில் நமக்கு நடக்கின்ற மிகப்பெரிய புதுமை நம்முடைய மனமாற்றமே!!! இதைத்தான் நம்முடைய முத்திப்பேறு. போனவென்தூர நமக்கு அவருடைய வாழ்வின் மூலம் இன்று உணர்த்துகிறார்.







அன்னையின் திருஉருவமானது இந்த ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டு அர்ச்சித்து புனிதப்படுத்தப்பட்டது.

சென்னையில் உள்ள மிகப்பழமையான ஆலயங்களில் ஒன்றாக இந்த ஆலயம் உள்ளது. ஏறக்குறைய 440 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகும். சென்னை மறைமாவட்டத்தில் உள்ள பழமையான பங்குகளில் ஒன்றாகவும் இது திகழ்கிறது. சென்னையில் லாசரஸ் சர்ச் என்றால் அனைவரும் அறியும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த அன்னையின் ஆலயமாக உள்ளது.

இங்குள்ள கல்வெட்டிலிருந்து நற்றுணை அன்னையின் மற்றொரு ஆலயம் மேற்கு வங்கத்தில் பல்பி என்கிற இடத்தில் கி.பி. 1582லிருந்தே இருப்பதும் அறியப்படுகிறது. கி.பி. 1957ஆம் ஆண்டு ஜீன் 1ஆம் தேதி நற்றுணை அன்னை ஆலயம் தனிப்பங்காக ஏற்படுத்தப்பட்ட நாளன்று, தியான ஆசிரமத்தில் உள்ள மாதர் தேயுஸ் ஆலயத்திலிருந்து நற்றுணை அன்னையின் திருஉருவமானது கொண்டு வரப்பட்டு, இந்த ஆலயத்தில் அர்ச்சித்து புனிதப்படுத்தப்பட்டது.

நல்வழித் தேடும் அனைவருக்கும் வழிகாட்டியாகவும், உறுதுணை தேடி வருவோருக்கு உற்ற துணையாக விளங்கும் இந்த அன்னை, தமிழக கிறிஸ்தவர்களின் வழிகாட்டியாகவும் விளங்குகிறார். அனைத்த தரப்பு மக்களையும் ஒன்றிணைக்கும் அன்னையின் பிரசன்னம் நமது வாழ்விலும், அதிலும் குறிப்பாக இருள்சூழும் நேரங்களில் நல்வழி காட்டுவாராக!

**திருப்பயணம் தொடரும்...................**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி

## யோவான்



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | | | | | 3 |
| | 7 | | | | | | | 8 | |
| | | 11 | | | | | | | |
| | | | 12 | | | | | | |
| | | | | X | X | | | | |
| | | | | X | X | | | | |
| | | | | | | 13 | | | |
| | | 10 | | | | | 9 | | |
| | 6 | | | | | | | 5 | |
| 1 | | | | | | | | | 2 |

**வலமிருந்து இடம்**

2)உண்மைக்கேற்ப வாழ்பவர்கள் ஒளியிடம் வருகிறார்கள். இதனால் அவர்கள் செய்யும் ……………..கடவுளோடு இணைந்தே செய்கிறார்கள் என்பது வெளியாகும்.

3)இயேசு நிமிர்ந்து பார்த்து மக்கள் பெருந்திரளாய் அவரிடம் வருவதைக் கண்டு ………… உண்பதற்கு நாம் எங்கிருந்து அப்பம் வாங்கலாம்? என்று பிலிப்பிடம் கேட்டார்.

5)இவ்வாறு கூறியபின் அவர் தரையில் ………… உமிழ்நீரால் சேறு உண்டாக்கி அச்சேற்றைப் பார்வையற்றவருடைய கண்களில் பூசி

8)பின்னர் தம் சீடரிடம், 3 இவரே உம் தாய் 3 என்றார். அந்நேரமுதல் ………… அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்.

9)அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசுக்கு அந்த ………… தெரியும். ஏனெனில் இயேசுவும் அவருடைய சீடர்களும் அடிக்கடி அங்குக் கூடுவர்.

13)இம்மண்டபங்களில் உடல்நலமற்றோர் பார்வையற்றோர் கால் ஊனமுற்றோர் முடக்குவாதமுற்றோர…………. திரளாய்ப்படுத்துக்கிடப்பர்.

**இடமிருந்து வலம்**

1)அவர் சான்று பகருமாறு வந்தார். ………….தம் வழியாக நம்புமாறு அவர் ஒளியைக்குறித்துச் சான்று பகர்ந்தார்.

4)இதோ! இங்கே இவர் வெளிப்படையாய்ப் பேசிக்கொண்டிருக்கிறாரே! யாரும் இவரிடம் எதுவும் சொல்லவில்லையே! ஒருவேளை இவரே மெசியா என்று …………… உண்மையாகவே உணர்ந்துகொண்டார்களோ?

6)அவருடைய சீடர்கள் அவரிடம் ரபி ………….. தானே யூதர்கள் உம்மேல் கல்லெறிய முயன்றார்கள் மீண்டும் அங்குப் போகிறீரா? என்று கேட்டார்கள்.

7)தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிற துணையாளர் ………… அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூயஆவியார்.





பாதுகாப்பும் உறுதி என்கிறது இன்றைய விழா. எனவே நாமும் இஞ்ஞானிகளைப் போல நம்பிக்கையோடு இறைவனைத் தேடுவோம். அவரைக் கண்டு நம்மையே அவருக்கு காணிக்கையாக்குவோம். இதன் வழியாக கிறிஸ்துவின் இறைத்தன்மையைக் கண்டு நமது மீட்பின் முழுமையை பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகத்தில் இறைவனின் மாட்சிமை வெளிப்படப் போவதை எசாயா இறைவாக்கினர் வழியாக எடுத்துரைக்கப்படுகின்றது. ஆண்டவருடைய மாட்சி சீனாய் மலையில் தங்கியது போல, கடவுள் நம்மோடு, நம்மேல் நம்மை சூழ்ந்துள்ளார் என்ற உண்மையை இன்றைய வாசகம் நமக்கு உணர்த்துகிறது. இவ்வுண்மையை உணர்ந்த மக்களாக இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

கிறிஸ்துவைப் பற்றிய மறைபொருளானது யூதர்களுக்கு மட்டுமல்ல மாறாக அனைத்து புறவினத்தவர்களுக்கும் என்பதை தூய பவுல் அடிகளார் இன்றைய 2 வது வாசகத்தில் எடுத்துரைக்கின்றார். கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கம், அடிப்படை, அனைத்தும் கடவுளது கொடையே என்கிறார் புனித பவுல். புனித பவுலுக்கு இறைவன் கொடுத்த அதே அருள் நமக்கும் அபரிவிதமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வருளுக்கு ஏற்ற வாழ்வு வாழ துணைபுரிய வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இயேசுவின் இறைத்தன்மையில் பங்குபெற்று, ஞானிகளை வழிநடத்திய விண்மீன் போல தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை இயேசுவிடம் அழைத்துச் செல்லும் விண்மீன்களாக வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2.அன்பின் இறைவா, எங்களது கிறிஸ்தவ விசுவாசப் பயணத்தில் ஒருபோதும் நம்பிக்கையை இழந்துவிடாமல், ஞானிகளைப் போல துணிவோடும், நம்பிக்கையோடும் எங்களது பயணத்தைத் தொடர்ந்து, இயேசுவைக் கண்டு அவரது மீட்பைப் பெற எங்களுக்கு அருள் புரிய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, புனித பவுலைப் போல நாங்களும் கிறிஸ்துவை அறிந்து அக்கிறிஸ்துவைப் பிறருக்கு அறிவித்திடவும், நாங்களே பிறருக்கு இறைவனின் வெளிப்பாடுகளாக அமைய எங்களுக்கு அருள் புரிய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக நம்பிக்கை இழந்து வாழ்கின்ற மக்களுக்கு நாங்கள் ஒவ்வொருவரும், அவர்களை வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் விண்மீன்களாக வாழ எங்களுக்கு அருள் புரிய இறைவா உம்மை மன்றாடுகின்றறோம்.

மகிழ்ச்சிமிக்க நன்றி பாடலோடு இப்புத்தாண்டில் கால்வைப்போம். நமது மகப்பேற்றுக்கும் அதைச்சார்ந்த உரிமைகளுக்கும் நன்றி செலுத்தும் போது இறைமக்களுக்கேற்ற புனித வாழ்வை, அன்பு வாழ்வை வாழ்வதற்கு அன்னை மரியாவிடமும் அவர் மகன் இயேசுவிடமும் மன்றாடுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை , ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் இப்புதிய ஆண்டிலே நல்ல உடல் உள்ள ஆரோக்கியம் பெற்று, மகிழ்ச்சியோடும் பாதுகாப்போடும் வாழ்ந்திட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, இப்புதிய ஆண்டிலே, நாடுகளுக்கிடையே உள்ள பகைமையும் போரும் மறைந்து, சமாதானமும், ஒற்றுமையும் உலகம் முழுவதும் பரவவும், மக்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் ஏற்று சகோதரர்கள் சகோதரிகளாக ஒன்றித்து வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, உம் தாயும் எங்கள் தாயுமாகிய மரியாவின் தாய்மையை வணங்கும் நாளில், எங்கள் தாய்மார்கள், சகோதரிகள் மற்றும் இளம் பெண்கள் அனைவரும் உமது அருளையும் அன்பையும் நிறைவாக பெற்று மகிழ்ச்சியோடும் பாதுகாப்போடும் வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, திருமணம் என்னும் அருட்சாதனத்தை பெற்று, தாய்மை நிலைக்காக ஏங்கி கொண்டிருக்கும் உம் பிள்ளைகள் மீது பரிவும் இரக்கமும் கொண்டு அவர்களை தாய்மை நிலைக்கு உயர்த்திட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா (08.01.2023)**

**எசா 60 :1-6 எபே 3:2-3,5-6 மத் 2:1-12**

**முன்னுரை**

இறையேசுவில் அன்பார்ந்தவர்களே, இயேசு கிறிஸ்து பிற இனத்தவர்களுக்கு தம்மை வெளிப்படுத்திய நிகழ்வை இன்று திருஅவை கொண்டாடி மகிழ்கின்றது. இப்பெருவிழா இயேசுவின் தலைமைப் பண்பையும், அவரது இறைத்தன்மையையும் மற்றும் அவரது உயிர்ப்பையும் நினைவுபடுத்துவதாக அமைகின்றது. இம்மூன்று ஞானிகள் கொடுத்த காணிக்கைகள், தாங்கள் தங்களுக்கு சொந்தமானவர்கள் அல்ல, மாறாக இறைவனுக்கு சொந்தமானவர்கள் என்ற உணமையை சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறு தங்களையே முழுமையாக அர்ப்பணிப்பவர்களை இறைவன் அற்புதமாக வழிநடத்துகிறார் என்பதை இன்றைய நற்செய்தி சுட்டிக்காட்டுகிறது. இயேசுவிடம் தங்களையே அர்ப்பணித்த ஞானிகள் பாதுகாப்புடன் தாங்கள் நாடு திரும்பியதாக இன்றைய நற்செய்தி கூறுகிறது. நாமும் நமது அனுதின வாழ்வில் இஞ்ஞானிகளைப் போல கடவுளுக்கு நம்மை அர்ப்பணித்து அவரையே நம் தலைவராக, மேய்ப்பராக, வழிகாட்டியாக ஏற்று வாழும்போது, நமது வாழ்வில் மகிழ்ச்சியும், நம்பிக்கையும்,





10)பிலாத்து இதைக் கேட்டதும் …………. மிகுதியாக அஞ்சினான்.
11)அந்த ஒளி இருளில் ……….. இருள் அதன்மேல் வெற்றி கொள்ளவில்லை.
12)காற்று விரும்பிய திசையில் வீசுகிறது. அதன் ஓசை உமக்குக் கேட்கிறது. ஆனால் அது எங்கிருந்து ……….. என்றும் எங்குச் செல்கிறது என்றும் உமக்குத் தெரியாது.

**கீழிருந்து மேல்**

1)இதுவே இயேசு செய்த முதல் அரும் ……….. இது கலிலேயாவில் உள்ள கானாவில் நிகழ்ந்தது. இதன் வழியாக அவர் தம் மாட்சியை வெளிப்படுத்தினார்.
2)அச்சமாரியப் பெண் ……….. நீர் யூதர் நானோ சமாரியப் பெண். நீர் என்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்பது எப்படி? என்று கேட்டார். ஏனெனில் யூதர்கள் சமாரியரோடு பழகுவதில்லை.
5)என் ……….. என்னிடமிருந்து யாரும் பறித்துக் கொள்வதில்லை. நானாகவே அதைக் கொடுக்கிறேன்.
6)ஏனெனில் …………. காரணமாக யூதர்களிடமிருந்து பலர் விலகி இயேசுவிடம் நம்பிக்கை கொண்டனர்.
9)படகைவிட்டு இறங்கியவுடன் கரியினால் தீ மூட்டியிருப்பதையும் அதன்மீது மீன் வைத்திருப்பதையும் அவர்கள் கண்டார்கள். அங்கு அப்பமும் ………….
10)……….. ஒருமித்து ஓடினர். மற்றச் சீடர் பேதுருவை விட விரைவாக ஓடி முதலில் கல்லறையை அடைந்தார்.
13)இங்கே சிறுவன் ஒருவன் இருக்கிறான். அவனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உள்ளன. ……….. இத்தனை பேருக்கு இவை எப்படிப் போதும்? என்றார்.

**மேலிருந்து கீழ்**

3)பின்னர் இயேசு நலமடைந்தவரைக் கோவிலில் கண்டு, இதோ பாரும் நீர் நலமடைந்துள்ளீர் இதைவிடக் கேடானது எதுவும் உமக்கு நிகழாதிருக்க ……………………செய்யாதீர் என்றார்.
5)ஆனால் நான் தீர்ப்பு வழங்கினால் அத்தீர்ப்புச் செல்லும். ஏனெனில் நான் ………….. தீர்ப்பு வழங்குவதில்லை என்னை அனுப்பிய தந்தையும் என்னோடு இருக்கிறார்.
7)நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன். உங்களிடம் திரும்பி …………
8)ஏனெனில் நீர் அவரிடம் ஒப்படைத்தவர்கள் அனைவருக்கும் அவர் நிலைவாழ்வை ………..மனிதர் அனைவர் மீதும் அவருக்கு அதிகாரம் அளித்துள்ளீர்.
12)அப்பெண் அவரிடம் கிறிஸ்து எனப்படும் மெசியா …………. என எனக்குத் தெரியும். அவர் வரும்போது அனைத்தையும் எங்களுக்கு அறிவிப்பார் என்றார்.

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-12-2022**

**சென்ற மாதத்தின் விடைகள் லூக்கா**

**வ. இ.** **1.** 1:10;**3**. 6:;**7. 5**:9;**7; 8**:15:14; **9.** 18:20;**11**.21:35;**13**.23:3

**இ. வ.** **2.** 3:7; **4.** 7:11; **6.** 11:33; **7.** 13:11; **10.**20:2; **12.**22:14; **14**. 24:5

**மே. கீ.** **1.** 2:23; **2.**4:13; **7.** 13:11; **8.** 16:1;**10**. 19:13

**கீ. மே.** **3.** 5:16; **4.** 8:56; **5.**10:27; **6.**12:11; **9.**17:2; .

# பார்புகழ் பாத்திமா அன்னை வரலாறு 7

கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி



### வந்தவர் யார்?

தனது அம்மாதான் பேரழகி என்றுதன்
மனது நினைத்திருந்த சிறுமி லூசியா
வந்திருந்த பேரழகியை வர்ணிக்க முடியவில்லை
கொண்டிருந்த பேரொளியை வகைக்கத் தெரியவில்லை
இருபாதம் மூடிநின்ற முளுநீள அங்கி
இடையிலே கட்டப்பட்ட பொன்னிற கம்பி (கயிறு)
சிகை செவி இவை மறைத்த
வேலைப்பாடு கொண்டுருளும் நீண்ட முக்காடு
தகதக தங்கக் கம்பிகளால் வேயப்பட்ட
தொங்கின சிலுவையுடன் பவளத்து செபமாலை
பளபள மின்னலாகச் சொலித்தாடுகின்ற திருமுகமாம்
இப்படிதான் லூசியா பின்னாளில் வடிக்கின்றாள்
அத்தகைய மாதவளை உருவமாகக் கண்டனரே
அண்ணார்ந்து பார்த்தே உணர்ச்சியற்று நின்றனரே
சிறிதுநேரம் கழித்தவுடன் சிறுமிலூசியா வினவினாளாம்
சிறுவர்களைக் காணவந்தீரே யாரென்று அளாவினாளாம்.
விண்ணகம் இருந்து இறங்கினேன் என்றதும்
தன்னகம் இருந்த சந்தேகம் ஒன்றினைக்
கேட்டிட இயலுமோ? லூசியா பணிந்தாள்
கேட்டிடும் சொல்கிறேன் அன்னை மொழிந்தார்
மண்ணகம் வாழ்ந்து இறந்த பின்னர்
விண்ணகப் பாக்கியம் தனக்குண்டோ? கேட்டாள்
நிச்சயம் உனக்குண்டு சட்டென பதிலீந்தார்
சத்தியம் தவறாமல் சாகும்வரை வாழென்றார்.
அடுத்த கேள்வியாய் ஜெசிந்தா என்றாள்
ஆமாம் என்றே பதிலாய் நின்றார்
பிரான்சிஸ் என்று பணிந்து கேட்டாள்
நன்றாய் செபித்தால் உண்டு என்றார்.





உலகைப் படைத்திட துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, உமது மகன் இயேசுவின் பிறப்பு எங்களை எல்லா தீமைகளிலிருந்தும், உலக நாட்டங்களிலிருந்தும் விடுவித்து, நாங்கள் நிறைவான மகிழ்ச்சியோடும், சமாதானத்தோடும் வாழ அருள் புரிய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.




**மரியன்னை இறைவனின் தாய் பெருவிழா (01.01.2023)**

**எண் 6:22-27 கலா 4:4-7**

**லூக் 2:16-21**

**முன்னுரை**

அன்பார்ந்த இறைமக்களே, புலர்ந்துள்ள இப்புதிய ஆண்டை இயேசுவின் இனிய நாமத்தில் தொடங்குவோம். அன்னையின் அரவணைப்பில் வாழ்வோம்.

இன்று இயேசு பிறந்த எட்டாம் நாள் . அவருக்கு இயேசு என்ற பெயரைச் சூட்டிய நாள். இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர், அனைவரும் மண்டியிடுவர். நாம் மீட்படைய இயேசுவின் பெயரைத் தவிர வேறு எந்தப் பெயரும் கொடுக்கப்படவில்லை. அப்பெயரால் நாம் தந்தையிடம் கேட்டு இறையருளையும், இறை ஆசீரையும் பெறுவோம், இப்புத்தாண்டில். மேலும் இன்று திருஅவை கன்னி மரியா இறைவனின் தாய் என்ற பெருவிழவைக் கொண்டாட அழைக்கின்றது. மரியன்னையின் தனிச்சிறப்பு அவர் இறைவனின் தாய் என்பதாகும். கடவுள், புனித யோவான் வாயிலாக மரியாவை நமது தாயாக அளித்தார். அத்தாயின் அரவணைப்பால் இப்புதிய ஆண்டை துவங்குவோம். மரியாவைப் போல நாமும் கடவுளுடைய விருப்பத்தை நிறைவேற்றி கிறிஸ்துவுக்கும் அவரது போதனைக்கும் சாட்சியாக வாழ்வோம். இஸ்ரயேல் மக்களுக்கு கடவுள் கொடுத்த ஆசீரை இப்புதிய ஆண்டில் நமக்கும் தருகிறார். ஆண்டவர் தம் திருமுகத்தை நம்மேல் ஒளிரச்செய்து, தமது அருளை நம்மீது பொழிவாராக. இப்புத்தாண்டு முழுவதும் கடவுள் நம்மை காக்கவும், வழிநடத்தவும் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இஸ்ரயேல் மக்களுக்கு இறைவன் அளித்த ஆசீர், இப்புத்தாண்டு துவக்கத்தில் இவ்வாசகத்தின் மூலம் நம் எல்லோருக்கும் அளிக்கப்படுகிறது. அவரது ஆசீர் ஒன்றே நம்மை அனைத்துத் தீமைகளிலிருந்தும் பாதுகாக்கும் சக்தி கொண்டது. புத்தாண்டிலே ஆண்டவரின் இரக்கம் நம்மோடு தொடர்ந்து இருக்கவும் இப்புத்தாண்டிலே இறைவனின் சமாதானம் நமக்கு கிடைக்கவும், அவரது பாதுகாப்பு நம்மோடு தொடரவும் வரம் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

ஆண்டின் முதல் நாள், நம் எல்லோருக்கும் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் தருகின்ற நாள். மரியா கடவுளின் தாயானதினாலே நம்முடைய தாயாகவும் மாறுகிறார். இன்று அவருடைய தாய்மையின் திருநாள். நம் அனைவரின் மகப்பேற்றின் திருநாள். எனவே

பிறப்பு. 'கடவுள் மனிதனானது, மனிதனை கடவுளாக்குவதற்காக' என்கிறார் புனித அகுஸ்தினார். இயேசு மனிதனாக மாறியது மனிதனை முழுமைக்கு அழைத்துச் செல்வதற்காக, வாக்களிக்கப்பட்ட இடத்திற்கு அழைத்துச் செல்வதற்காக. ஏனென்றால், எங்கு முழுமை உள்ளதோ அங்குதான் மனிதன் மனிதனாக மதிக்கப்படுவான். உறவிலே ஒன்றுபடுவர். ஆணும் பெண்ணும் ஒரு சமுதாயத்தோடு மற்றொரு சமுதாயமும், ஒரு நாட்டோடு மற்றொரு நாடும் நட்புறவிலே வாழும் நிலையை உருவாக்கவே , இறைவன் தமது தெய்வீகத் தன்மையை மனிதர்களோடு பகிர்ந்து கொண்டார். 2000 ஆண்டுகளுக்கு முன்பு பெத்லகேமில் பிறந்த இயேசு இன்று நம்மிடையே பிறப்பதற்கு வருகிறார். நாமும் அப்பாலன் இயேசுவை நமது இதயங்களில் தாங்கி அவரது தெய்வீகத் தன்மையில் பங்குபெற்று சமத்துவமும் சகோதரத்துவமும் நிறைந்த உலகைப் படைத்திடுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகம் மெசியா பற்றிய தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்துகிறது, இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போருக்கு ஒளி தர விண்ணிலிருந்துது விடியல் நம்மைத் தேடி வருகிறது. கிறிஸ்து இருளினின்று நம்மை விடுவித்துவிட்டார். எனவே மகிழ்ச்சியடைவோம். நமது மகிழ்ச்சியானது அறுவடை காலத்தில் நெல் விளைச்சல் கண்ட உழவரின் மகிழ்ச்சி போன்றும், எதிர்பாராத அளவற்ற செல்வம் கிடைத்தவர் பெறும் மகிழ்ச்சி போன்றும் இருக்க வேண்டும். இம்மகிழ்ச்சியானது வெறும் புற மகிழ்ச்சியாக மட்டும் அமைந்துவிடக் கூடாது. மாறாக, அகமகிழ்ச்சியாக இருக்க வேண்டும். ஆண்டவருக்குள் நாம் கொள்ளும் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

இன்று கிறிஸ்து பிறந்த விழா நம்மில் நம்பிக்கை வைக்கும் அனைவருக்கும் அருள் வாழ்வு அளிக்கவே கிறிஸ்து பிறந்து, நம்மைப்போல வாழ்ந்து, நமக்காகத் தன் உயிரையே கையளித்தார் என்று புனித பவுல் அடியார் இவ்வாசகத்திலே கூறுகின்றார். கதிரவன் தோன்றிய பிறகு காரிருளுக்கு வேலையில்லை. எனவே இவ்வுலகிற்கு உரியவையான உடல் ஆசை, இச்சை நிறைந்த பார்வை, செல்வச் செருக்கு முதலியவற்றை அகற்றி, இறைப்பற்றை நம்மிலே வளர்க்க முயல்வோம். இதற்கு உதவும் பக்தி, நீதி, விவேகம் முதலியவற்றைப் பின்பற்றி நம் வாழ்வைச் செம்மைப்படுத்துவோம்.

**மன்றாட்டுக்கள்.**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவின் பிறப்பு தருகின்ற மகிழ்ச்சியை நிறைவாக ஏற்று அம்மகிழ்ச்சியை பிறரோடு பகிர்ந்து வாழ அருள் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, உம் மகன் இயேசுவின் பிறப்பு எங்களது குடும்பங்களுக்கு சமாதானத்தையும், மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் தருகின்ற நிகழ்வாக அமைய அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா, உமது அன்பு மகன் பாலன் இயேசுவை எங்களது இதயங்களில் தாங்கி , நாங்கள் அனைவரும் அவரது தெய்வீகத் தன்மையில் பங்குபெற்று சமத்துவமும், சகோதரத்துவமும் நிறைந்த





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



**திருவருகைக் காலம் 3- ஆம் ஞாயிறு (11.12.2022)**

**எசா 35 :1-6 யாக் 5:7-10 மத் 11 :2-11**

**முன்னுரை**

இறையேசுவில் அன்பார்ந்தவர்களே, மெசியாவின் வருகைக்காக நாம் நம்பிக்கையோடும் பொறுமையோடும் இருக்க இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. கிறிஸ்துவின் பிறப்பு நமக்கு மகிழ்ச்சியையும், நம்பிக்கையும் தருகின்ற நிகழ்வாக இருக்கும் என்றும் இன்றைய வாசகங்கள் நமக்கு நினைவூட்டுகின்றன. விவிலியம் ஒரு பக்கம் கடவுளுடைய நீதியையும் மறுபக்கம் கடவுளின் இரக்கத்தையும் காட்டுகிறது. மெசியாவின் வருகைக்காக மக்களைத் தயாரிக்கக் கடவுள் திருமுழுக்கு யோவானை அனுப்பினார். அவரும் கடவுளுடைய நீதியை மையப்படுத்தி மெசியாவை மக்களுக்கு அறிவித்தார். கடவுளின் நீதி அவரது இரக்கத்தையும் அன்பையும் மையமாகக் கொண்டதாக அமைகிறது. மெசியா செய்ய வேண்டிய செயல்கள் எல்லாம் கிறிஸ்து செய்ததால், அவரே மெசியா என்பதைச் சொல்லாமல் சொல்கிறார். இயேசுவின் செயல்களே அவர் மெசியா என்பதற்குச் சான்று. இன்றைய உலகில் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பது சாட்சிய வாழ்வு. நாம் கிறிஸ்துவின் சீடர்கள் என்பதை நமது செயல்களால் சான்று பகர இறைவன் நமக்கு அழைப்பு விடுக்கின்றார். திருமுழுக்கு யோவானைப் போல இயேசுவுக்கு சாட்சி பகர அருள் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகத்தில் மெசியா என்ன என்ன செய்வார் என்று இறைவாக்கினர் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். மெசியாவின் காலத்தில் பார்வையற்றோரின் கண்கள் பார்க்கும், காது கேளாதோரின் செவிகள் கேட்கும். அப்போது கால் ஊனமுற்றோர் மான்போல் துள்ளிக் குதிப்பர். வாய் பேசாதோர் மகிழ்ந்து பாடுவர். மெசியா செய்ய வேண்டிய செயல்களை எல்லாம் கிறிஸ்து செய்ததால் அவரே மெசியா என்பதை உணர்த்தும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

திருமுழுக்கு யோவானைப் போல, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை விரைவில் வரவேண்டும். கடவுளின் பழிதீர்க்கும் நாளாக அது இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். இந்நிலையில் தூய யாக்கோபு இன்றைய இரண்டாவது வாசகத்தில் ஆண்டவரின் வருகை

வரை பொறுமையோடு இருங்கள், உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துங்கள், ஏனெனில் , ஆண்டவரின் வருகை நெருங்கி வந்து விட்டது என்கிறார். விண்ணகம் சென்ற ஆண்டவர் மீண்டும் வருவார் என்ற நம்பிக்கையோடும் பொறுமையோடும் வாழ்ந்திட வரம் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் மெசியாவின் வருகைக்காக நம்பிக்கையோடும், பொறுமையோடும் காத்திருந்து அவர் தரும் மீட்பை முழுமையாகப் பெற்றிட வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, இத்திருவருகைக் காலத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் மனம் மாற்றம் பெற்று, கிறிஸ்துவுக்கும் அவரது போதனைக்கும் சாட்சியம் பகிர துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் . நேர்மையாளரை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன் என்ற உமது வார்த்தையின் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு எங்களது பாவ வாழ்வை விட்டு விட்டு உம்மைப் பின் தொடர வரம் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, உமது மகனின் பிறப்பு எங்களது குடும்பங்களுக்கு சமாதானம், மகிழ்ச்சி, நம்பிக்கை தருகின்ற நிகழ்வாக இருக்கவும், நாங்கள் உமது அருளையும் , அன்பையும் நிறைவாகப் பெற்று வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**திருவருகைக் காலம் 4 ஆம் ஞாயிறு (18.12.2022)**

**எசா 7:10-14 உரோ 1 :1-7 மத் 1:18-24**

**முன்னுரை**

இறையேசுவில் அன்பார்ந்தவர்களே, நமது இறைவன் வாக்கு மாறாத இறைவன். அவர் தாம் செய்து கொண்ட உடன்படிக்கையை மீறுவதும் இல்லை, கொடுத்த வாக்குறுதியை மாற்றுவதுமில்லை. இந்த இறைவார்த்தைப் பகுதிக்கு அர்த்தம் தருவதாக இருக்கிறது இன்றைய வாசகங்கள். கன்னிப் பெண் கருத்தரிப்பார் என்ற எசாயாவின் இறைவாக்கு, கிறிஸ்துவின் பிறப்பில் நிறைவேறுவதாக புனித மத்தேயு தனது நற்செயதியில் சுட்டிக் காட்டுகிறார். இஸ்ரயேலின் மரபுப்படி கடவுளின் ஆவி படைப்புடன் தொடர்பு கொண்டதாகக் கருதப்படுகிறது. வார்த்தைக்கு மனு உருவெடுக்கத் துணைபுரிந்தவர் இதே இறைவனின் ஆவி என்பது வானதூதரின் கூற்று. அவரே இயேசு, 'இம்மானுவேல்' இறைவன் நம்முடன் வாழ்கிறார். இதுவே கிறிஸ்து பிறப்பு விழாவின் மையப்பொருள். இறைவனின் வாழ்வை கிறிஸ்து வழியாகப் பெற்று வாழ இன்றைய இறைவார்த்தை வழிபாட்டின் மையக்கருத்தாக அமைகிறது. அந்த தூய ஆவியின் கொடைகளைப் பெற்று கிறிஸ்துவோடு இணைந்து வாழ தேவையான அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

எம்மானுவேல் இறைவாக்கு எனப்படும் பகுதி பழைய ஏற்பாட்டில் முக்கியமான ஒன்று. ஆகாசு மன்னன் இறைவனில் நம்பிக்கை கொள்ளாமல், தனது திறமையின் மீது நம்பிக்கை வைத்து அசீரிய அரசனிடம் உதவி நாடுகின்றார். தனது முடிவில்லாப் பொறுமையினால் யாவே கடவுள் மீண்டும் எசாயா இறைவாக்கினர் வழியாக எல்லா மனிதரையும் காப்பாற்றும் அருங்குறியாக ஆகாசுக்கு ஓர் அருங்குறி தருகிறார். ஆகாசுவின் நம்பிக்கையற்றுப்போன மக்கள் கடவுளின் பிரசன்னத்தைக் காணவேண்டும் என்ற நோக்கோடு இந்த இறைவாக்கை குறித்து வாசிக்கக் கேட்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

உரோமையருக்கு எழுதிய திருமுகத்தின் முன்னுரையில் இறை மக்கள், நற்செய்தி பணியாளர் இவர்களது, அழைப்பு, பணி முதலியன பற்றியும் நற்செய்தி என்றால் என்ன என்பது பற்றியும் பவுல் அடியார் கூறுகிறார். திருவருகைக் காலத்தில் நமது அழைப்பு , கடமைகள், நற்செய்திப் பணிபற்றித் தியானிக்க இவ்வாசகம் பெரிதும் உதவும் என்ற நம்பிக்கையோடு இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்.**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர்கள் பொதுநிலையினர் அனைவரும் தூய ஆவியின் கொடைகளையும், கனிகளையும் நிறைவாகப் பெற்று இறைவனது மீட்பை முழுமையாகப் பெற துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, இத்திருவருகைக் காலத்தில் நாங்கள் அனைவரும் மனம்மாற்றம் பெற்று கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, மரியாவைப் போலவும் அவரது கணவரான யோசேப்பைப் போலவும் இறைவனில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு வாழவும் அதன் வழியாக அவரது அன்பையும் அருளையும் பெற துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற வார்த்தையில் நம்பிக்கை கொண்டு எல்லா சூழ்நிலையிலும் மகிழ்ச்சியோடும் மனத்திடத்தோடும் வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கிறிஸ்து பிறப்பு பெருவிழா (25.12.2022)**

**எசா 9 :1-7 தீத் 2:11-14 லூக் 2 :1-14**

**முன்னரை**

புதிதாய்ப் பிறந்துள்ள இந்தப் பாலகன் இயேசு நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்றும், உண்மையான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, சமாதானத்தை இவ்வுலகிற்கு அருள வேண்டுமென்றும் இறைஞ்சுவோம்.

வரலாற்றில் நடந்த ஒரு நிகழ்ச்சி வரலாற்றையே மாற்றி அமைத்தது என்றால் அது கிறிஸ்துவின் பிறப்பு மட்டுமே. இதற்கு காரணம், கடவுளைப் பற்றிய புதிய பார்வையை மனித குலத்திற்கு இயேசு கொண்டு வந்ததே! கடவுள் மனிதரை விட்டு எங்கோ தூரத்தில் இருப்பவர் என்ற பழைய சிந்தனையை மாற்றி, மானிட வரலாற்றிலும், மனிதரின் இன்ப துன்பத்திலும் பங்கெடுப்பதன் மூலம் நம்மோடு இருக்கிறார் 'இம்மானுவேல் என்ற புதிய சிந்தனையை அறிவித்தது கிறிஸ்துவின்